


ஓலை 195| ஓசை 318| அக்டோபர் 2026

# அகர முதல இலக்கியப் பேரவை



மாபூரம் வேதநாயகம் (1826-1889)

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ம] சிவம் அறக்கட்டளை




# திருக்குறள்

## குறள்

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றது
நன்கலம் நன்மக்கள் பேறு

## பொருள்

வாழ்க்கைக்குச் சிறந்தது நல்ல பண்புகளை உடைய மனைவியே ஆகும். அவளைப் பெற்றெடுக்கும் நல்ல மக்களே அவளுக்கு அழகிய அணிகலன்கள் ஆவர்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com




நிறுவனர்

## செல்வமுத்துகுமரன்
## குணசேகரசிவம்

ஆசிரியர்கள்

## அ.வில்சன்
## குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

## ச.சூர்யா, அ.வில்சன்

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

எழுவாய் தமிழே!

(தனிச்சொல் பெற்ற
பதின்சீர் மண்டிலம்

இருட்டினையும் தின்றுதின்று இளைத்துவிட்ட நிலவாக
இரும்பிரும்பி களைத்துவிட்ட நோயாளி -போல
எந்தமிழே நீயுமா நோயாளி?
இருட்டுக்காய்க் கதிரவனும் இடம்பெயர்ந்து சாவதில்லை;
இடம்பெயர்ந்தே எந்தமிழன் சாகிறான் - தமிழே
எழுந்திடாமல் ஏன்கிடந்து நோகிறாய்?

புள்ளிகளே எழுத்துகளாய் மாறியிங்கே போனதனால்
பைந்தமிழ் நிலைமாறி நின்றாய் - இனி
போர்ப்படையாய் எழுந்துநின்று வெல்வாய்!
சுள்ளியெல்லாம் வேரென்று விளம்பரத்தால் வரும்போது
தெள்ளுத்தீந் தமிழேநீ வேர்தான் - இன்று
சுள்ளிப்போல் கிடக்கலாமா? நீதான்!

போர்க்கருவி இல்லாமல் அமைதிவழிக் கிளர்ச்சிகூட
பாரினிலே வருவதுண்டோ? கேளாய் - தமிழே
போர்பரணி பாடிடவே எழுவாய்!
நீர்மேலே எழுதிவைத்த எழுத்துகளாய் தீவுனிலே
நற்றமிழர் இனம்மாய்ந்து போச்சு - அங்கே
நாதியற்று இனம்மறைய வாச்சு!

புற்களையே தமிழ்வயலில் பயிரிட்டு வீழ்ந்துவிட்டாய்
போர்க்கருவி பயிரிடவே எழுவாய் - தமிழே
பசுமைநிறை விடுதலையை நடுவாய்!
அற்பரெல்லாம் தமிழேஉன் பிள்ளைகளா? சீச்சீச்சீ
அடியோடு புதைத்துவிட எழுவாய் - இனி
அராவணன் போல்பிள்ளை பெறுவாய்!

உலகாண்ட கதைச்சொல்லி, உறங்கிவிட்ட தமிழரெலாம்
உணர்வுகொண்டு எழுந் டவே வேண்டும் - ஈழ
உரிமைவந்து விடிந்திடவே வேண்டும்!
பலகாலம் வீழ்ந்திருந்தே உயிர்வாழ்தல் தேதைதானா?
சிலகாலம் வாழ்ந்தாலே போதும் - தமிழே
தரைநடுங்க எழுவாய்எப் போதும்!







நெருப்பலையார் இராம. இளங்கோவன்

அகர முதல இலக்கியப் பேரவை

# நல்வழிகள்

பாவகை : அறுசீர் விருத்தம் (விளம்+காய்+காய்)

1.அன்புடன் பிறரைநீயே அரவணைப்பாய்
அவ்வியம் கொள்ளாமல் அடங்குவாயே

இன்னலைத் துடிப்புடனே விரட்டிடுவாய்
இன்மொழி பேசிடவே எண்ணுவாயே



என்றுமே நற்செயலை ஆற்றிடுவாய்
எற்றியே வஞ்சத்தை அகற்றுவாயே

தன்னமை பேணிடவே உள்ளிடுவாய்
தன்வினை தாக்கினாலும் எழுவாயே.

2.நல்லன செய்திடுவாய் நாளுமேநீ
நலிவிலும் உழைப்பினையே நாடிடுவாய்

அல்வழி ஒதுக்கிடுவாய் அன்புடனே
அல்லிலும் நேர்மையையே கடைபிடிப்பாய்

ஒல்லெனக் கடமையாற்ற எம்பிடுவாய்
ஒல்கினும் வாய்மையிலே ஒவ்விடுவாய்

வல்வினை செய்வோரை ஒதுக்கிடுவாய்
வவ்வியே நன்னெறியில் ஒழுகுவாயே.

கவிஞர் செ. கலைவாணி

க. அல்லவை அறுத்து செழுமை விளைக்கும்
அற்றது அகற்றிடும் நட்பு.

உ. அறம்பிறழ் மன்றம் அகலா பழியேற்க
அழுகை பொதியும் நிலம்.

ங. அற்றது அறுக்கும் அறிவைப் பெருக்குக
செறுநர் செருக்கு அறும்.

ச. அறமென்பது யாதெனின் இம்மையுள் ஈதல்
மறுமை அறுக்கும் பிறப்பு.

ஞ. ஈதல் தழைத்தோங்க இன்மை அறுபடும்
கல்லாமை இல்லா நிலம்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

(புதுயுகப் பரணி)

பரணி பாடுவேன், நானும் பரணி பாடுவேன்;
பரணி இலக்கியம் பாடிட இலக்கணம்
முழுமையும் அறியா முட்டாள் நானென்றாலும்
முடியுமென்னால் பரணி பாடப்பது கவித யிலே!

பண்டை நாளில் பரணி பாடினர்
போர்க்களத்தில் ஆயிரம் யானையைக் கொன்ற
வீரனொருவன் மீதென அறிந்த பாவலனடியேன்
வானில் பறந்த விமானத்தில் காட்டிய
வீரத்தை எண்ணியே பரணி பாடுவேன்!

துபாய்நாட்டின் விமானமொன்று ஃப்ளைதுபாய் பெயர் கொண்டு
தூரத்து தேசமாம் இஸ்ரேலுக்குப் பறக்கும்போது
தொழுகை செய்வதாய் சொல்லிவிட்டு இரக்கமின்றி
துணைவிமானி பொறுப்பில் தவறி ஆபத்தில்
உதவ வைக்கப்பட்ட கருவியாலே உடனிருந்த
முதன்மை விமானியைத் தாக்கியதை எண்ணினால்
முதியவன் மனத்திலும் கோபம் கரைபுரள்கிறதே!



அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்று ஆறாக ஆரியற்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்குகண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் எம்மை
அளித்துக்காப்பான்...

தீரத்துடன் சண்டையிட்டான் முதன்மை விமானி
வீரன் அனுமனவன் அருளாளே சாலிசாபாடி;
குருதி கொட்டிய போதும் நம்பிக்கையை
கைவிடாது விமானிகள் அறைக்கதவைத் தாள்திறந்து
கைகலப்பு நடப்பதைப் பயணிகள் அறியச் செய்து
காத்துக் கொண்டான் தன்னோடுயேனை பயணிகளை ும்;
கருதுகிறேன் இத்தீரச்செயலை போர்க்களத்தில் ஆயிர
களிறுகளை வென்றதிலும் அதிவீரச் செயலென்றதனா
கவிஞன் யானும் பாடுகிறேனொரு புதுயுகப்பரணியே!

இந்திய தாய்த்திரு நாட்டின் குஜராத்தில்
வந்துதித்து வானில்பறக்கும் விமானியாய் வாழ்வுயர்த்
சந்தித்த துயரமதில் மனந்தளராது பதட்டமின்றி
விந்தைமிகு செயல்புரிந்து பயணிகள் உயிர்காத்த
சுமித்மச்சாரே! அனுமனைப்போல் சிரஞ்சீவியாய் நீவிர்வாழ்கவே!!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# நானும் உன் மௌனமும்

பிரிய வேண்டும்
உன்னை மட்டுமல்ல
உன் நினைவுகளையும்தான்!

வாயினால் பேச்சு
உள்ளமோ
கடிவாளம் இடாத
குதிரையாட்டம் போல
மனசுக்குள்ள நிற்குதே!

மறக்கச் சொன்ன நீயே
உன்னை அறியாது
தினம் தினம் மனதில்
பதிவாகி நிற்கிறாய்
அன்று நீயும் நானும்
பேசியவைகளை!

ஏன் ஒதுக்கிவிட்டாய் என
நான் அறியேன்!
காரணத்தைத் தேடிட நான்
விரையவில்லை!

நீ மறந்து போகலாம்
நான் மறக்க நினைத்த நினைவுகள்
கூடாரம் அமைத்து
இதய அறையினுள்
உறங்குகின்றன!



மீண்டும் மீண்டும்
ஊஞ்சல் ஆடும் நிலை
இப்போது
வெறுமையில் தூங்குகிறது
அந்த நினைவோடு கூடிய
நேரங்கள்!

நீ ஏன் என்னுடன் இப்படி நடக்கிறாய்?
நிதானமாய் பதில் தந்துவிடு!
வாழும் பொழுதே
வார்த்தைகளைக் கொட்டிவிடு
நிம்மதிப் பெருமூச்சு விட!

கவிஞர் ஜாவனிற்றா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

பின்னிரவை
கனவின் கரம் பற்றி
புறந்தள்ளுகிறேன்.

வேரூன்றிய கனவு
விடியும் மட்டும்
கோலோச்சுகிறது.



பொட்டலப்பால்
குளிர் சரிந்து
காலையின் சூட்டை
எட்டியிருக்கும் வேளை.

கனவின்
இறுதி கட்டம்
என் கழுத்தை நெரிக்கிறது
கொண்டவளின் சாயலில்
பிசாசொன்று.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# எழுதித் தீர்க்கப்பட்டவை



எனக்குள் தோன்றும் உணர்வுகள்
என்னுள் உதிக்கும் எண்ணங்கள்
என்னை வதைக்கும் அச்சங்கள்
என்னில் பிறக்கும் ஐயங்கள்

என்னைக் கொண்டாடிய வெற்றிகள்
எனக்குள் வலித்த தோல்விகள்
என்னகம் சுமக்கும் ஏக்கங்கள்
என்னுள் செதுக்கப்படும் கனவுகள்
என்னையே விஞ்சிடும் என் கற்பனைகள்

என்னில் பொறாமைப்பட்ட வதனங்கள்
என்னை ஆரத்தழுவிய கரங்கள்
என்னைத் தாங்கிப்பிடித்த தோள்கள்
எனக்காய் உழைத்த உள்ளங்கள்

எனக்காய் வழிகாட்டிய வழிகாட்டிகள்
என்னிடம் உண்மையாயிருந்த உறவுகள்
இறுதியாய், என்னை நம்பிய என்னவர்கள்
என என்னோடு பயணிக்கும் ஒட்டுமொத்தமும்
விதியின் வரிசையில் எழுதித் தீர்க்கப்பட்டவையே கண்மணி!

கவிஞர் ஹாஸ்மியா தாஹா, அநுராதபுரம் (இலங்கை)

செந்தமிழ் சொல்லெடுத்து
செப்புகிறேன் கவிதை
இனியவளே இதயத்தை
இதமாய்க் கவர்ந்திட்டாயே

இதழமுதம் இனித்திடும்
இளவரசி நீதானே
இளந்தென்றலாய் இசைமீட்டி
இனிதாய் வருகிறாய்

ஆரணங்கின் பேரழகில்
ஆனந்தம் அடைகிறேன்
காரிகையே பார்வையால்
காந்தமாய் ஈர்த்திட்டாயே

இனிதானது காதல்
இன்பமானேன் அன்பே
கோவைப்பழம் நீயாகிட
கொஞ்சும் கிளி நானானேனே

மயக்கும் மான்விழியால்
மனதைத் துளைத்தாயே
தோகை விரித்தாடிடும்
மயிலின் எழிலானவளே

உள்ளமது உவகையாகிட
உரிமையாய் நெருங்குகிறேனே
ஓராயிரம் கவிதைகளிலும்
எழுதுகிறேன் உன்பெயரையே



கன்னக்குழிதனில் விழுந்தே
கனிவானேன் கண்ணே
எண்ணமதில் நிறைந்தே
வண்ணங்களாய் ஆனாயே

தளிருடல் மேனியும்
தள்ளாடி நடைபயிலுதே
வாழ்வது வசந்தமாகிட
வரமாகியே வந்திடுவாயே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# அவள் பயிர் பெண்

சிரிக்கும் முகமூடிகளுடன்
சமூகத்தின் முகவரியாய்
பெண்

சில ஆண்களின்
காம பசிக்கு இரையாகும்
இரைகளாய் பெண்

இவர்களின் வக்கிர ஆட்டத்திற்கு
இளமையும் முதுமையும்
தாயக்கட்டைகளாய்

இந்த ஓநாய்களின் பற்களில்
சின்னஞ்சிறு மலர்களும்
கிழிக்கப்பட்ட இதழ்களாய்



சாலையில் செல்லும் பெண்மையின்
பின்னே ஓராயிரம் காமக்கண்கள்
பாதயாத்திரையாய்

பெண் என்னும் பெயர்
உள்ளவர்கள் பாலியல்
பக்கங்களில் பயங்களாய்

பாரதியின் பராசக்திகள்
தெருவோரங்களில் கசக்கி
எறியப்படும் குப்பைகளாய்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

உன் அன்பின் ஒற்றைத் துளிக்காக,
தன் ஆயுள் முழுவதையும் அடகு வைப்பாள்
நீ கோபத்தின் நஞ்சை வாரி இறைத்தாலும்,
அவள் அன்பின் அமுதத்தையே திருப்பித் தருவாள்
தாங்கித் தாங்கி சிதைந்த இதயத்திற்கு,
நீ பரிசாக அளித்ததெல்லாம்
உதாசீனத்தின் உலோகக் குத்துகளும்,
அவமதிப்பின் ஆழக் காயங்களுமே.



உன் அநீதிகள் எல்லை மீறினாலும்,
தன் நேசத்தின் ஈரத்தால் உன் வறண்ட மனதை
நனைக்கவே முயல்வாள்.
ஆனால்... ஒரு பெண்ணின் பொறுமைக்கும்
ஒரு புனிதமான எல்லை உண்டு!
உன் கல்லறை போன்ற இதயத்தில்
அவள் அன்பின் விதைகள் முளைக்காது என
உணர்ந்த கணமே, அவள் உன்னிடமிருந்து
விலகத் தொடங்குவாள்.

உடலால் உன்னருகில் வாழ்ந்தாலும்,
உள்ளத்தால் உன்னை அடக்கம் செய்து விடுவாள்.
அன்று முதல், அவள் மௌனம் வெறும் அமைதியல்ல.
உன் மீதான காதலின் இறுதிச் சடங்கு
உடைந்த பின் ஒட்டாத கண்ணாடிபோல்,
நொறுங்கிய அவள் நம்பிக்கையும்
மீண்டும் முழுமை பெறாது.

நீ காட்டிய சிறு அன்பைக் கூட
இறுதி மூச்சுவரை நினைவில் சுமப்பாள்.
ஆனால், நீ ஏற்படுத்திய காயங்களின் வடுக்கள்
அவள் ஆன்மாவில் நிரந்தர கல்வெட்டுகளாய் நிற்கும்.

துன்புறுத்தி நீ அவளைத் துரத்தியபோது,
கண்ணீரை விழுங்கியபடி மௌனமாக விலகிச் சென்றாள்.
அவள் சிரிப்பாள் பேசுவாள்
கடமைகளையும் நிறைவேற்றுவாள்.
ஆனால், அவள் உள்ளத்தின் கதவுகள்
உனக்காக நிரந்தரமாக மூடப்பட்டிருக்கும்.
மன்னிப்பாள்... அவள் பெண்!
ஆனால் மறக்க மாட்டாள்
ஏனெனில் அவள் அனுபவித்த வலிகள்
அவள் உயிரின் ஆழத்தில் பொறிக்கப்பட்ட காயங்கள்!

நினைவில் கொள்!
ஒரு பெண்ணின் அன்பு மரணமடையும் போது,
அது ஒரு உறவின் முடிவு மட்டுமல்ல
ஒரு மனிதன் வாழ்நாள் முழுவதும் மீட்டெடுக்க முடியாது.
இதுவே பேரிழப்பின் தொடக்கம்!

கவிஞர் நிஸ்ரினா மதீனா, மாத்தளை

கண்ணுக்குத் தெரியாமல் மண்ணைத் தொட்டு
திசைகளின் வரைபடம் வரையும் தூரிகை
மலர்களின் இதழில் மெல்ல முத்தமிட்டு
மரங்களின் கிளைகளில் தடம் பதித்து
தழுவிச்செல்லும் அமைதிப் பயணம்
மணல் மேடுகளிலும் அலைகளின் அலப்பறையிலும்
காற்று எழுதிச் செல்லும் கவிதை
புயலின் வேகம் கொண்டும் விழுங்கும்
மயக்கும் இசைப்பயணமாய் புல்லாங்குழலில்
உயிரின் மூச்சிலும் தன் முத்திரையைப் பதித்திடும்
இயற்கையெனும் இளையக்கன்னியின் அரிய கொடையே!



கவிஞர் சுகுமாரி சுந்தரராஜன், விருதுநகர்

விழிகள் வினா தொடுக்கிறது
எங்கே என் பார்வையின்
ரசிகனை என்று
தூரதொலைவில் நீ போனதால்
விழிகள் அருவியாகி விட்டது.



கண்மூடி காண்கிறேன்
நாம் கண்ட கனவுகளை

அதுவோ

கானல் நீராய் விழி நீருடன்
ஐக்கியமாகி விட்டது.

# உறவுகள்

உறவுகள் இனிமையானவை
நீரை அடித்தால் இரு பிரிவுகளாகும்
ஆனால் மீண்டும் ஒன்றாகும்
நல்ல உறவைப் போல;

சிலநேரம் நம் கையே நம்
கண்ணைக் குத்துதல்போல்
உறவுகளும் குறும்புகள்
செய்து தொல்லை தரும்தான்;



கண்ணில் விழுந்துவிட்ட தூசியாய்
அவற்றைத் துடைத்தாலும்
காலம் கடந்தும் வடுவாக
நின்று நினைவூட்டும்;

சில உறவுகள்
காற்றடிக்கும் திசை செல்லும்
காற்றாடி போலச் செல்லும்;
அவை நம்மையும்
இழுத்துத் தள்ளப் பார்க்கும்;

ஆற்றில் மிதக்கும்
தக்கை மேலிருக்கும் எறும்பாக
நாம்தான் நம்மை நினைத்து
எதிர் நீச்சலும் கற்று

மறத்தல் நன்று.

கவிஞர் வளவ. துரையன், முகலிவாக்கம்

விசைப்பொழுதில்
விடியலாய் விரியும் மனசுதுடிக்கும்

இதயத்தினை அளப்பதும் உண்டோ ?
துவண்டு போகுமோ குவலயத்தின் சுற்றுகள்

சுவர்க்கோழியின் அலாரம் சுட்டிடுமோ
கணங்களை

காத்திருக்கும் இதயம்
கானலின் இன்னலிற்காகவா?

மௌனப் பெருவெளியில்
எதிர்மூச்சுக்கள் எம்மாத்திரம்

ஏக்கங்கள் சூழ்ந்து எங்கிருந்து அனல்கள்?
கௌவிக் கொள்ளக் காத்திருக்கும் கேள்விகளோ?



உளவியலாய் உயரத்தில் காத்திருக்கும்
எதிர்பார்ப்புகளோ?

உருமாறும் கணங்களில்
உண்மைகளையே தேடுவதோ?

வேள்விகளின் வெந்தணலின்
வெப்பமும் எரித்திடுமோ?

எத்தனை கணங்கள் வழிமீது விழிவைத்தே
காத்திருக்கும் எதிரொலி கானமெல்லாம் விரவுகிறதோ?

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

வாராத கண்ணனுக்கு தான்
எத்தனை வரவேற்பு?

தூங்காமல் கொள்ளாமல்
துதி பாட காத்திருக்கும் கனவோடு
ஆணிப்பொன் வயிறு தொட்டுப் பார்த்தபடி
தினந்தோறும் நிற்கிறாள்
பிள்ளை வரம் கிட்டாத ராதை!

இரவிற்கும் இருளுக்கும்
இடையில் நிற்கிறது
அவளின் கருணை மனு!

ஓர் உருவில்
ஓர் வடிவில்
கணநேரம் அவள் காதோரம்
மழலைப் பூக்களை
மலர விட்டு பார்க்கத்தான்
மை தடம் கண்ணனுக்கு
மனம் இல்லையோ?

எத்தனை இரவுகள்?
எத்தனை கனவுகள்?
அத்தனையிலும் அவள் வடித்த கண்ணீர்
ஆறாத வடுவாய்
அடங்கிக் கிடக்கிறது
அவள் தலையணைக்கடியில்...!

இதம் தான் ; நிதம் தான்
மழலை மொழி சுகம் தான்



அது நிலவை குடித்த வரம் தான்
அவளுக்கு வழங்கவில்லை
கார்மேகக் கண்ணன் வரம் தான்!

பேருக்கு ஒன்று
பெருமைக்கு ஒன்று
எனப் பெரிதாய்
அனேகர் சிரிக்கையில்
உரிமைக்கு ஒன்றாய்
அவள் உயிரை மலர்த்திட
வாராயோ கண்ணா!

இருந்தும்
வாராத கண்ணனுக்கு தான்
இங்கு எத்தனை வரவேற்பு?

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

பரந்து விரிந்த ஆகாயம்
சிறகை விரிக்கும் பறவைக்கே அதுசொந்தம்
கனவுகள் கொட்டிக்கிடக்கும் ஏராளம்
எட்டிப் பிடிக்க நினைப்பவருக்கே கைசேரும்

முடிவைப் பற்றி எண்ணாமல்
முயற்சி தன்னையே நம்பிடுவோம்
பாதை முடிந்து போனாலும் இங்கே
பயணங்கள் முடிந்து போவதில்லை



காரணம் சொல்லிக் காத்திருந்தால்
காலம் கூட சுமையாகும்
காலம் கருதி நடை போட்டால்
காரியம் யாவும் கைகூடும்.

எட்டாக்கனியே அதிகம் சுவையாம்
எட்டிப் பறித்தால் ஏற்றம் உண்டாம்
ஏமாற்றம் கண்டும் உடையாமல்
மாற்றம் நாடி முன்னேறு

சோம்பல் கொண்டு முடங்கி விட்டால்
சிலந்தியும் கூட சிறைபிடிக்கும்
துணிந்து நாமும் செயல்பட்டால்
தடைகள் யாவும் தகர்ந்தோடும்

இருளில் கூட இயங்கிடும் பூமி
இயலாமை ஒன்றே தோல்வியின் சாவி
நம்மை நம்பி தருவோம் உழைப்பை
சிந்திடும் வியர்வை தந்திடும் உயர்வை

கவிஞர் திருமதி. கீர்த்தனா பு, கோபிச்செட்டிபாளையம்

சாதிமத பேதமற்ற சமத்துவம் நிலவும்
நீதிபேசு பவரும் நித்தம் புழங்கு மிடமே
வீட்டின் தூய்மையை வீதியெங்கும் வீசினும்
கூட்டும் துடைப்பமும் சேர்த்திடும் என்னிடமே

பலத்த மழையால் பகுத்துப் பிரிக்காமல்
நிலத்தில் விழுந்ததை நிரப்புமே குழிகளில்
துப்பும் எச்சிலும் துணையின்றி வழிந்தோடி
செப்பும் வார்த்தையின்றி சேர்த்திடும் நீருடனே

கலங்கல் கழிவுடனே கலக்கியே ஊர்ந்திடும்
பலமான வெள்ளத்தால் பள்ளியாகும் கால்வாயிலே
நகர்ப்புற மிதக்கும் நாற்றமோடு சேரும்
கவர்ச்சி நெகிழி கல்லாகி அடைக்குமே

துப்புறவாளர் சகித்துமே துடைப்பார் கைகளினால்
நாற்புறமும் சகதியாய் நாளைல்லாம் மிதக்குமே
பாதசாரிகள் நடைபாதை பாதியளவு நீரிலே
மீதியளவுத் தெரியாமல் மூழ்குவாரே திக்கற்று

கண்ணிற்கு எட்டுமளவு கடலையேக் காணோமே
எண்ணியே அளந்தாலும் எப்பக்கமும் என்னுயிரே
மனித இனமும் மகிழ்வுப் பெருக்காலே
குனியாமல் வீசிடும் குப்பைக்கு அளவில்லையே

பாதுகாப்பு வேண்டிடும் பாதிப்பேத் தெரியாமல்
நித்தம் வீசுகிறோமே நிம்மதி நாம்பெறவே
கடலிலே சேராமல் கல்லான மாந்தரும்
உடலின் அழுக்குகளை உணர்வின்றி கண்டயிடமே

சொர்க்க பூமியைச் சொல்லொண்ணாத் துயராக்கி
வர்க்க மூலமாய் வழுக்கும்படி விடுகின்றனரே
மழலைகள் மகிழ்ந்தோடும் தேரோடிய வீதியினை
புழங்காமல் செய்தனரே புறமெல்லாம் சகதியாய்



பூனையும் நாயும் இடம்தேடி இருக்குமே
தன்னடைய கழிவுகளைப் பிறருக்குத் தெரியாது
மனிதனின் பாதுகாப்பை மாண்புற அமைத்தாலும்
புனிதனாக விளங்கிட புரிந்திடுவாய் மாற்றமாய்

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

நிழலைத் துரத்தும் நிஜத்தைப் போல,
நெஞ்சம் எதையோ தேடுதடா!
விடை தெரியா வினாவுக்குள் சிக்கி,
உயிரும் தினமும் வாடுதடா!

அன்புக்காய் ஏங்கி அலைந்த இரவுகள்,
அழுகைச் சத்தமாய்க் கரைகிறதே!
கூட்டத்தில் நின்றும் தனிமையின் வறட்சி,
நெஞ்சை நெரித்துக் கொல்கிறதே!

எல்லாமும் இருந்தும் ஏதுமில்லா ஏக்கம் ,
என்னைத் தின்னும் தீயானதே!
புன்னகை அணிந்த முகத்தின் பின்னே ,
புயலொன்று வீசும் நாடானதே!

தாகத்தில் தவிக்கும் ஒரு பறவையாய்,
சிறகுகள் சோர்ந்து விழுகிறேன்!
பாலைவனத்து மணலிலே விழுந்து,
தண்ணீர்! தண்ணீர்! என அழுகிறேன்!

அலறித் துடித்த என் மனதைக் கட்டி,
அமைதி எனும் சிறையிலிட்டேன்!
ஆயிரம் கவலைகள் உருகிப்போக,
அழுது தீர்த்துத் தெளிவடைந்தேன்!

வெளியே தேடிய தாகமெல்லாம்

என் கண்ணீர்த் துளியில் அடங்கியதே!
எனக்குள்ளே நான் சரணடைந்த நொடியில் ,
ஏக்கப் பெருவெளி அமைதியானதே!



கவிஞர் அக்பர் ஜனுல் முன்சிலா, மருதமுனை

# உயிர்கள் எல்லாம் ஒன்றே

உயிர்கள் எல்லாம் ஒன்றே - இதை
உணர்ந்திடு மானிடனே!



வானில் பறக்கும் பறவைக்கும்
மண்ணில் நடக்கும் மனிதனுக்கும்
ஒரே மூச்சு, ஒரே வலி
ஒரே உயிர் தானே!

கத்தும் நாயும், கர்ஜிக்கும் சிங்கமும்
துள்ளும் மானும், ஊரும் எறும்பும்
அன்பைக் கேட்கும், பசியை உணரும்
நம்மைப் போலவே தானே!

அடிக்காதே, வதைக்காதே
அன்பை மட்டும் கொடு
அவைகளும் வாழப் பிறந்தவை
இந்த பூமி அவைகளுக்கும் சொந்தமே!

உயிர்கள் எல்லாம் ஒன்றே
உலகம் எல்லாம் ஒன்றே
அன்பால் இணைவோம்
விலங்குகளைக் காப்போம்!

கவிஞர் ஏ எம் முர்ஷிதா பேகம், இலங்கை

உயர்ந்த கோபுரத்தைத்
தாங்கும் அடிக்கல்
அமைதியாகப் பக்குவமாக இருக்கிறது.
ஞானியைப் போல
ஆனால்
பெருங்காற்று வீசியதால்
காற்றில் பறந்து
கோபுரம் தீண்டிய சருகு
நான் தான் பெரியவன்
உயர்ந்தவன் என்று
ஆரவாரம் செய்கிறது
வசதிகள் பல அடைந்த
புதிய பணக்காரனைப் போல



பல கோடி செலவு செய்து
கட்டப்பட்ட மாளிகை போன்ற உயர்ந்த வீடு
மௌனமாக இருக்கிறது.
ஆனால்
அதைப் பெருக்கிச் சுத்தம் செய்யும்
துடைப்பானோ
துள்ளுகிறது.

அச்சம் தவிர்த்திடு
அகத்தால் தெளிந்திடு
அன்பால் அணைத்திடு
அறத்தால் உயர்ந்திடு

பெண்மைப் பேணிடு
பெருமை களைந்திடு
பேதமை மறந்திடு
பேராற்றல் வளர்த்திடு

நகைப்பைக் குறைத்திடு
நாணம் காத்திடு
வெட்கம் அணிந்திடு
வேற்றுமை விரட்டிடு

இலட்சியம் வகுத்திடு
இலக்குகள் தெரிந்திடு
சிறையினை உடைத்திடு
சிகரங்கள் தொட்டிடு



உன்னை அறிந்திடு
உண்மையாய் நடந்திடு
உணர்வுகளில் உயிர் பெறவே
உத்தமியாய் வாழ்ந்திடு

மென்மையை மறைத்திடு
மெழுகுவர்த்தி கொழுத்திடு
இருளை ஒளியாக்கிடு
இகத்தினைக் காத்திடு

கணவனை மதித்திடு
கருணையாய்ப் பார்த்திடு
குழந்தைகளின் உலகமாய்
குலத்தினை வளர்த்திடு

தடைகளைத் தகர்த்திடு
தடயங்கள் பதித்திடு
தன்னம்பிக்கை கொண்டிடு
தரணியை வென்றிடுவாயே

கவிஞர் சேஹு மொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ

எல்நினோ தாக்கத்தால் உயர்ந்ததே வெப்பம்
மழையும் பருவம் மாறிப் பெய்திடலாம்
மாறிய சூழலாலே பெருந்துயர் அடைந்ததனால்
உணவிற்குப் பஞ்சமும் தானாக ஏற்படலாம்!

அடைமழை காலத்தில் மழையின்றித் தவிப்பதனால்
உருண்டோடும் வெள்ளமில்லை அணைகளுமே உயரவில்லை
நிலைப்பயிரும் காய்கின்றதே புதுப்பயிரும் நடவில்லை
உழவர்களும் வேலையற்று உழலுகின்ற நிலைஇங்கே!

கடல்வெப்பம் உயர்ந்ததாகக் காற்றுவாக்கில் தகவல்
உடலெல்லாம் வெப்பத்தால் உயிர்வாங்கிப் போகின்றதே
மனிதனுக்கும் மரத்திற்கும் மாறியதே சூழலிங்கு
மாற்றத்தால் விளையுமிடம் குடிநீருக்குப் பஞ்சம்வந்தே!

மாறிடுமோ நிலைமைஇனி பழையபடி வந்திடுமோ
தேறிடுமோ சூழலெல்லாம் தேர்வெழுத வைத்திடுமோ
ஆறிடுமோ மனம்தானே வெளுக்கும்மழை வந்திடுமோ
தூறிடுமோ தூறல்தானே வெப்பத்தைக் குறைத்திடுமோ!




கவிஞர் முனைவர். இரவி சீனுவாசன், உடுமலைப்பேட்டை

புல்லைத் தின்ற ஆடு!
அது சுத்த சைவம்!
புல் வளர்த்தவன்
சைவம் இல்லை; அவன்!
ஆட்டை வெட்டி
கூறு போடும்
கசாப்புக் கடைக்காரன்,
அசைவமில்லை, அவன்!
சைவம் என்ன!
அசைவம் என்ன!
அவன் அகம் மூடி
அட்சி அகல விரித்து,
அரிவாளை வீச;
ஒரு உயிர்
உணவெனும் அமுதமாகும்!
புல் வளர்த்தவனுக்கும், எனக்கும்.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

விழி பூத்தன விழிகளின்
சங்கமத்தில் சரசமாய்
மனம் பூத்தன மயக்கும்
புன்னகையில் மௌனமாய்

இதழ் பூத்தன மௌனத்தின்
மொழியினில் இதமாய்
இதயம் பூத்தன இருவிழிக்
கவிதையின் காதலாய்

காதல் பூத்தன கனிந்த மனதின்
காவிய தேசமாய்
கவிதை பூத்தன காதல்
மனதினில் இன்னிசையாய்

மயக்கம் பூத்தன மனதின்
சங்கமத்தின் சாரலாய்
களவாடிய நெஞ்சத்தில்
சதிராடும் நேசமாய்

மலரும் தருணமதை உணர்ந்து
உல்லாசமாய்
காதலெனும் பொன் வீதியில்
கலையாத கவிதையாய்



கவிஞர் சுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டினம்)

ஆரவாரமற்ற
அவள் ஆர்ப்பாட்ட நினைவுகள்
கொடி ஏந்துகிறது
என்னுள்.

அவள் அழைத்துப்
பேசியதில்லை
நினைத்துப் பேசும்போதெல்லாம்
தவறாமல் வரும்
நிற்காத விக்கல்.



எங்கள் தமிழில்
நாங்கள்
சங்கத்தமிழ்தான் பேசினோம்
அதனாலென்னவோ
பாலைத் திணை ஆனோம்.

அவள்
கடல் போல் இருந்தால்
சேராத அலை யென்பதைத்தான்
மறந்தேன்.

செடிகளுக்குத் தெரிவதில்லை
பூக்கள் உதிருமென்று
பூக்களுக்கும் தெரிவதில்லை
செடி நமக்கில்லை என்று

யார் தான் நமக்கு?
நாம் தான் யாருக்கு?

கவிஞர் கோ. டோன்குமார்



கல்லுக்குள் உறங்கும் கனவைக் காண்பவன்!
கைவிரல் தொடுதலில் உயிரைத் தருபவன்!
தெய்வங்களின் திருவுருவை, திகைக்க வைக்கும்
காட்சிகளை, காலங்கள் கடந்தாலும் அழியாத
சாட்சிகளாய் ஆக்கிடும் பேராற்றல் சிற்பிக்குண்டு!
கரடுமுரடான பாறைகளில் உருவாகும் சிற்பம்
கருணையின் வடிவாகத் திகழ்தல் அற்புதம்!
ஓராயிரம் உணர்வுகளைக் கடத்திடும் சிற்பம்
வரலாற்றைப் பறைசாற்றும் வடிவமைப்பின் நுட்பம்!
வீரத்தை, அன்பை, அரசர்களின் உருவத்தை
பெருமைகளை பண்பாட்டை பேசிடும் சிற்பங்கள்!
உளியே ஆயுதம்! தோற்றிடும் பாறைகள்!
வெல்வது சிற்பியின் கைவண்ணம்! வெளிப்பாடு
சொல்லிடும் அவனின் உழைப்பின் வலிமையை!
அடிபட்ட பாறைகளே அழகிய சிற்பங்களாய்!
வலிகளைத் தாங்கி வாழ்வைச் செதுக்கிடுங்கள்!
உள்ளத்தால் தளராது உழைத்திடுங்கள் எந்நாளும்!
தன்னம்பிக்கை உளிகொண்டு தகருங்கள் தடைகளையும்!
என்வாழ்வைச் சிறப்பாகச் செதுக்கிய சிற்பியென
மனமகிழ்வை, பெருமிதத்தை அனுபவித்து மகிழ்ந்திடலாம்!

கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

மரம்
என்றாலே
கம்பீரம் தானே
இலைகள்
இருந்தால் என்ன
உதிர்ந்தால் என்ன



சிரித்தாலும் அழுதாலும்
காரணம் கேட்கும்
இப்போலி உலகில்.

சில மௌனங்கள்
மட்டுமே நிஜம்.
அதை உணர்ந்து
ஒரு கணம்
நிம்மதிப் பெருமூச்சு
விடுவதும் இங்கே
பெருஞ்சிரமம்.

தனிமையை விரும்பிய காலம் போய்
இன்றோ - நிம்மதியைத் தேடி
மௌனத்தில் தஞ்சமடையும்
இதயங்களே ஏராளம்..
பாரத்தைப் பகிர்ந்தால்
சுமை குறையும் என்பார்கள்...



ஆனால்,
தனிமையின் மௌனத்தில்
சிந்தித்துப் பார்த்தால் மட்டுமே
தீர்வுகள் பிறக்கின்றன..
வெளிப்பார்வைக்கு இது
மன அழுத்தமாய்த் தோன்றலாம்...

ஆனால்
தேர்வெழுதி முடித்துவிட்டு
முடிவுக்காக அமைதியாய்க் காத்திருக்கும்
சிறுவனின் மனநிலைதான் போல் தான் இந்நிலை
ஒரு வார்த்தை சொன்னால்
ஆயிரம் கேள்விகள் கேட்டு
துயரத்தை அறுவடை செய்யும்
மனிதர்களிடமிருந்து காக்கும்
அரணும் இந்த மௌனம்தான்..

வார்த்தைகள் எல்லை மீறும் உலகில்,
காயங்களுக்கு மருந்தாவதும் மௌனம்தான்..
பேச்சில் வெளிவராத உண்மைகள்
மௌனத்தில்தான் பிறக்கின்றன...
பிறருக்குப் புரியவைக்கத் தேவையில்லை எனும்
முதிர்ச்சி வரும்போது,
அந்த மௌனமே பேரமைதியைத் தருகின்றது..

கவிஞர் ரஸ்னா ரம்ஸான், அக்குறணை (இலங்கை)

இமயத்தை போல கணக்கும் மனதும் பாதம் பட்ட
கால் எட்டுகளுக்குள் தேடல் கொள்வதெலாம்.
இத்தனை சோடி தடங்களுக்குள்
உந்தன் பாதச்சுவடுக்கு துணைத்தடம் எங்கே?
என்று தான் இல்லையா? கண்மணி!



அலைகளுக்கு இணையாக மனதின் இறைச்சல்களை
மூடி மறைக்கும் மன்மத பேதை நீயும் தானே கண்மணி!
மீன்கொத்தி பறவையுமே கவ்விக்கொள்வதெலாம்
கத்திடதெரியாத கடல்வாழ் இராணியையோ இராஜாவையோ
சிறு அலகில்தான் இக்காட்சிக்குள் நுழைந்தால்?

வலிக்கும் தானே இத்தனை காதல் சோடிகளுள்
நான் மட்டும் எப்படி தனித்து விடப்பட்டேனென்றே தான்
கலங்குவாய் கண்மணி!
அலையை துவைத்து கரையை அடையும் நுரையைப்போல
தரையை நோக்கும் விழியில் தங்கிய வலித்துளிகளும்
போட்டி போட்டு வீழ்ந்துடைகிறது.

அதிசயத்தை கண்டு விழியசைப்பை நிறுத்தியது போல
காதலை தேடி கால்பாதத்தை புதைத்து நடந்தால்
விதி விதிர்த்து வழி திறந்திடுமா என்ன?
சங்கடம் கொண்டோயோ கண்மணி!
புல்லாங்குழலைப்போல பல்லவி பாடத்தொடங்கும்
மனதை என்ன செய்வாய் கண்மணி!

மறைய காத்திருந்து வெளுப்பு சிவப்பை நீட்டி
படந்து அலங்கரிக்கும் ஞாயிறாய் வாழ்வும்
மாறுமென காத்திரு கண்மணி.
விண்ணொளி பட்டு சிதறிய மின்னல் போல
கண்ணில் பட்டு நெஞ்சில் துடிப்பாய் மாறும்
காதலும் வந்து சேரும் காத்திரு கண்மணி!

அவசரமில்லை கண்மணி
யாரோ வாவழ்ந்துவிட்டாரென
அவசர அவசர தெரிவுகள்
வேண்டாமே கண்மணி.

நினைத்ததை முடிக்காது
படைத்தவன் விடுவதில்லை கண்மணி.

கருத்தில் கொண்டிரு கண்மணி
காலமே கூடிவர
காவியமோ கலங்கரை தீபமோ ஆகலாம் கண்மணி.

கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம்

நெஞ்சமென்னும் கூட்டுக்குள்
நீங்காத நினைவுகள்
சிறு வயது குறும்புதான்
நினைத்திட்டால் இன்பம்தான்.



கவலைகள் துக்கங்கள்
இல்லாத பருவம்தான்
எதிர்கால கனவுகள்
நினைத்திடாத வயது தான்.

இனிமை ஒன்றே வாழ்வென்று
சந்தோஷமாய் சுற்றியே
பொன்னான காலத்தை
புழுதியிலே தொலைத்திட்ட
இருளான நாட்கள்.

தொலைத்திட்ட நாட்கள்தான்
திரும்பவும் வந்திடுமோ
தங்கமான நாட்களாய்
மாற்றியே வென்றிடும்
புத்திதான் இனியேனும் வந்திடுமோ!

கடந்த கால நிகழ்வுகள் கனவாக போகட்டும்
இனி வரும் காலங்கள் வெற்றியின் பாதையில்
முன்னெடுத்துச் செல்லவே
முழுமூச்சாய் உழைத்திடுவோம்
"வெற்றிக்கனி" பறித்திடுவோம்!

கவிஞர் ஜேப்பி @பன்னீர்செல்வம், சேத்தியாதோப்பு

மழைத்துளி பட்டு மண் மணக்கிறது
மரங்களும் காற்றில் தலை அசைக்கிறது
வயல்வெளி எங்கும் பசுமை பூக்கிறது
வானத்து நிலவும் அழகாய் நோக்குகிறது

காலைக் கதிரவன் கண் விழிக்கிறான்
காட்டுப் பூக்களும் சிரித்து மகிழ்கிறது
ஓடும் நதியில் ஒளி தெறிக்கிறது
ஓசை இன்றி வாழ்வு வளர்கிறது



மரம் வளர்த்தால் மழை பெறலாம்
மழை பெற்றால் உயிர் வளர்க்கலாம்
இயற்கை தாயை மறந்து வாழ்ந்தால்
இன்பம் என்பது இல்லை ஆகும்

இயற்கையோடு இணைந்து வாழ்வோம்
இனிய உலகை காத்து வளர்ப்போம்

கவிஞர் நஸ்ரினா, குருனாகல் (இலங்கை)

## குதிகுதியாய்

செய்பணியில்
வார இறுதி வேலை
நாளின் ஆரம்பத்தில்
சொந்த மண் செல்லும்
உற்சாகத்திலும்

இல்லம் சென்றபின்
இன்னும் கொஞ்ச நேரம் தான் என
மணிக்கணக்கு கொண்டு
வருத்தத்திலும்

பணிக்கான
பயணம் தொடங்கியபின்
உறவுகளிடம் மட்டுமல்ல
வீட்டையும்
பழகிய இடங்களுக்கும்
வருகிறேன் என
சொல்லிவிட்டு
நாளை இத்தனை
பணிகளா என
பரபரப்பும் பதற்றமுமாய்

குதியாய் குதிக்கும் மனம்

**********

## எந்த பக்கம்?

ஒரே நாளில் திட்டமிட்டு
முடித்த பணியினால் கிடைத்த
தன் திருப்தியும்

தனித்திறமைக்கு அங்கீகாரத்தால்
மனநிறைவும்

அதை செய்யவில்லை இத யோசிக்கவில்லை
என்ற வார்த்தை விளாசல்களாய்
கடும் விமர்சனங்களும் நிகழுகையில்

விமர்சனங்களை புறந்தள்ளி
தன் திருப்தியையும்
பாராட்டையும்
கொண்டாடுபவரா



என்ன கிடைத்து
என்ன இப்படியான
வசைபேச்சு வந்துவிட்டதே
என்று புலம்புவரா

இங்கே கொஞ்சம் அங்கே கொஞ்சம்
என போய் வருபவரா

நீங்கள் எந்த பக்கம்?

## முன்னுரை



தமிழ் உரைநடை வரலாற்றிலும், தமிழ்ச் சமூக மறுமலர்ச்சிப் பாதையிலும் நீங்கா இடம் பெற்ற பெருமகனார் மாயூரம் வேதநாயகம் பிள்ளை. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர், தமிழின் முதல் புதினமான பிரதாப முதலியார் சரித்திரம் நூலை இயற்றி "தமிழ் நாவல் உலகின் தந்தை" என்று போற்றப்படுகிறார். நீதிபதியாகவும், கவிஞராகவும், இசைப் புலவராகவும், சமூகச் சீர்திருத்தவாதியாகவும் விளங்கிய இவரது விரிவான வாழ்க்கை வரலாறு மற்றும் சாதனைகள் கட்டுரை இதோ.

## பிறப்பும் இளமைப் பருவமும்

பிறந்த தேதி: அக்டோபர் 11, 1826,; பிறந்த ஊர்: திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள குளத்தூர் (இனாம் குளத்தூர்). பெற்றோர்: சவரிமுத்துப் பிள்ளை — ஆரோக்கிய மேரி அம்மையார்.

கல்வி: தொடக்கக் கல்வியைத் தந்தையிடம் கற்ற இவர், பின்னர் தியாகராச பிள்ளை என்பாரிடம் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளை ஆழமாகக் கற்றறிந்தார். மேலும் வடமொழி, பிரெஞ்சு, இலத்தீன் ஆகிய மொழிகளிலும் புலமை பெற்றிருந்தார். வீணை வாசிப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்தார்.

## அரசுப் பணியும் 'மாயூரம்' பெயர்க் காரணமும்

1848-இல் திருச்சி நீதிமன்றத்தில் ஆவணக் காப்பாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் தன் பணியைத் தொடங்கிய வேதநாயகம் பிள்ளை, ஆங்கில அரசின் உரிமையியல் தேர்வு எழுதி வெற்றி பெற்று 1857-இல் தரங்கம்பாடியில் உரிமையியல் நீதிபதியாக (District Munsiff) பொறுப்பேற்றார்.

1860 முதல் மாயூரத்தில் (தற்போதைய மயிலாடுதுறை) 13 ஆண்டுகள் தொடர்ந்து நீதிபதியாகப் பணியாற்றியதால், மக்களின் அன்போடு "மாயூரம் வேதநாயகம் பிள்ளை" என்று அழைக்கப்பட்டார். பின்னர் மாயூரம் நகரமன்றத் தலைவராகவும் மக்கள் தொண்டாற்றினார்.

## இலக்கியப் பங்களிப்புகளும் நூல்களும்




### 1. தமிழ் நாவல் உலகின் தந்தை

பிரதாப முதலியார் சரித்திரம் (1879): தமிழில் எழுதப்பட்ட முதல் நாவல் (புதினம்) என்ற வரலாற்றைப் படைத்தது. இதில் தமிழ் உரைநடையின் அழகையும், பெண்ணுரிமை, அறநெறி போன்ற சிந்தனைகளையும் எளிய பாணியில் எடுத்துரைத்தார்.

சுகுண சுந்தரி (1887): இவரது இரண்டாவது நாவலாகும்.

### 2. பெண்கல்வி மற்றும் சமூகச் சீர்திருத்த நூல்கள்

19-ஆம் நூற்றாண்டிலேயே பெண்கல்விக்காகவும் பெண் விடுதலைக்காகவும் தீவிரமாக குரல் கொடுத்தவர் வேதநாயகம் பிள்ளை:

பெண்மதி மாலை (1869): பெண்களுக்கு ஏற்ற அறநெறிகளையும் கல்வி அவசியத்தையும் விளக்கும் நூல்.

பெண்கல்வி, பெண்மானம்: பெண்களின் முன்னேற்றத்திற்காக எழுதப்பட்ட தனித்துவமிக்க படைப்புகள்.

மாயூரத்தில் பெண்களுக்காகத் தனியாகப் பள்ளி ஒன்றைத் தொடங்க உதவினார்.

### 3. அறநெறி மற்றும் இசை நூல்கள்

நீதி நூல் (1860): திருக்குறள் வழியில் வாழ்வியல் அறங்களைச் செய்யுள் வடிவில் எடுத்துரைக்கும் நூல்.

சர்வ சமய சமரசக் கீர்த்தனை (1878): மத நல்லிணக்கத்தை வலியுறுத்தி 200-க்கும் மேற்பட்ட கர்நாடக இசைப் பாடல்களை இயற்றினார்.

சத்திய வேத கீர்த்தனை, திருவருள் அந்தாதி, தேவமாதர் அந்தாதி போன்ற ஆன்மீகப் படைப்புகளையும் இயற்றியுள்ளார்.

### 4. முதலாவது சட்ட மொழிபெயர்ப்பாளர்

ஆங்கிலத்தில் மட்டுமே இருந்த சென்னை உயர்நீதிமன்ற (Southern Court) 56 ஆண்டு காலத் தீர்ப்புகளை (1805—1861) முதன்முதலாகத் தமிழில் மொழிபெயர்த்து 'சித்தாந்த சங்கிரகம்' (1862) என்ற நூலாக வெளியிட்டார். இதன் மூலம் தமிழில் சட்ட நூல்களைக் கொண்டுவந்த முன்னோடியாகத் திகழ்ந்தார்.

கொடை உள்ளமும் வள்ளல் தன்மையும்

1876-1878 காலக்கட்டத்தில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தின் போது (தாது வருடப் பஞ்சத்தின் போது), தன் சொந்தச் சொத்துக்கள் அனைத்தையும் கொடையளித்து மாயூரத்திலும் அதைச் சுற்றியுள்ள ஊர்களிலும் 'கஞ்சித் தொட்டிகள்' அமைத்துப் பல்லாயிரக்கணக்கான மக்களின் பசியைப் போக்கினார்.

இவரது கொடைப் பண்பைப் பாராட்டி, பிரபல இசைக்கலைஞர் கோபாலகிருஷ்ண பாரதியார் "நீயே புருஷ மேரு" என்று பாடிப் புகழ்ந்தார். மேலும் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, வடலூர் இராமலிங்க வள்ளலார் ஆகிய அறிஞர்களுடனும் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார்.

## நிறைவுரை

நீதி தவறாத நேர்மை, தமிழுக்கும் சமுதாயத்திற்கும் ஆற்றிய அரும்பணி, பெண்ணியச் சிந்தனை எனத் தன் வாழ்நாளை அர்ப்பணித்த வேதநாயகம் பிள்ளை ஜூலை 21, 1889 அன்று இயற்கை எய்தினார்.

இவரது தமிழ் சேவையைப் போற்றும் வகையில் தமிழ்நாடு அரசு இவரது படைப்புகளை நாட்டுடைமை ஆக்கியுள்ளது. தமிழ் உரைநடைக்கும் நாவல் துறைக்கும் பிள்ளையார் சுழி போட்ட மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் புகழ் தமிழ் வரலாற்றில் என்றென்றும் நிலைத்து நிற்கும்.



மாயூரம் வேதநாயகம் (1826-1889)






# நாளை நமதே

சக்தியின் மறுவடிவமான பெண்,

குடும்பத்தின் ஒளி

விளக்கு மட்டுமல்ல;

ஒட்டுமொத்த சமூகத்தின்

வெற்றித் தூண்.

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே




முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே தூலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலைலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை



தொடர்புக்கு :

9597887847
8870884969

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com